**MCOP .No. 42/2019**

**Date : 17.10.2022**

***ம.சா.1 முத்துச்செல்வி***

***எ.த.கு.வி***

விபத்தில் இறந்து போன முருகன் எனது கணவர் ஆவார். சம்பவ விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது கணவருக்கு 35 வயது இருக்கும். எனது கணவரின் வயதை காண்பிக்ககக் கூடிய பிறப்பு சான்று எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் நகை தயாரிக்கும் தொழில் செய்து வந்தார். எனது கணவர் தனியாக நகை தொழில் செய்யவில்லை. மணிகண்டன் என்பவரின் பட்டறையில் தங்க செயின் செய்யும் வேலை செய்தார். மணிகண்டனின் பதிவு சான்றுடன் கூடிய மணிகண்டன் அளித்த சம்பள கணக்கு எதையும் நீதிமனற்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது கணவர் மதுபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவ விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்பதால் விபத்து குறித்து முதல் விசாரணையில் கூறியுள்ள சஙக்திகள் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டவுடன் சஙகரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை எடுத்துவிட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி ஹைறகிரவுண்ட் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். திருநெல்வேலி ஹைறகிரவுண்ட் மருத்துவமனையில் வைத்து எனது கணவர் இறந்துவிட்டார். எனது கணவரை விபத்திற்கு பின்னர் தனியார் மருத்துவமனை எதிலும் சேர்க்கவில்லை. மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டிவிகிதம் அதிகப்படியானது என்றால் சரியல்ல. சம்பவ விபத்தானது எதிர்மனுதாரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும், எனது கணவர் தான் விபத்திற்கு முழு பொறுப்பு என்றால் சரியல்ல. சம்பவ இடம் அருகே வேகத்தடை உள்ளதால் பேருந்துகள் அனைத்தும் மெதுவாக தான் செல்ல இயலும் என்றால் சரியல்ல. சம்பவ இடம் அருகே உள்ள வேகத்தடையினை மனுவில் கூறாமல் மறைத்து இழப்பீடு பெற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் குடிபோதையில் சைக்கிளில் சென்று விழுந்ததால் தான் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

எனவே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**